1971 S.L.F.P அரசின் கல்வி அமைச்சர் பதியுதீன் முகமட்டினால் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விப் பெறுபேறுகளில் தரப்படுத்தல் என்னும் செயற்பாடு தமிழ் மாணவர்களுக்கு குறிப்பாக பல்கலைக்கழக அனுமதியை நாடிய மாணவர்களுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆகவே
இத்தரப்படுத்தல் கொள்கையை எதிர்த்து மாணவர்கள் சாத்வீகப் போராட்டங்களிலும், வன்முறைப் போராட்டங்களிலும் ஈடுபட்டனர். சத்தியசீலன், அரியநாயகம் போன்றோர் தலைமையில் இயங்கிய மாணவர்கள் தமிழ் மாணவர் பேரவை என்ற அமைப்பை உருவாக்கிக் கொண்டனர். இவ்விதமாக அமைக்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவையில் இருந்த பலர் தனித்தனிக் குழுக்களாக அரசுக்கெதிரான வன்முறைகளில் ஈடுபட்டனர். இந்தநேரத்தில் இளைஞர்கள் மத்தியில் தனியாட்சி பற்றிய கருத்துக்கள் வளரத் தொடங்கின. தமிழரசுக் கட்சியின் ஊர்காவற்துறை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சுயாட்சிக்கழக ஸ்தாபகருமான ஏ.நவரெட்ணம் அவர்களும் அப்போது தனியாட்சிக் கருத்தைக் கொண்டிருந்தார்.

வன்முறைகளில் ஈடுபட்ட குழுக்கள் ஒன்றிலேயே உரும்பிராய் சிவகுமாரனும் இருந்தார். பண்ணைப் பாலத்துக்கு குண்டு வைத்தவரும், சந்திர சேகரா A.S.P யின் ஜீப்புக்கு குண்டு வைத்தவரும் இவரேயாவார். அத்துடன் யாழ் நகரசபை மேயர் துரையப்பாவின் காருக்கு குண்டு வைத்து தகர்த்தபோது துரையப்பா உயிர் தப்பினார். S.L.F.P அரசின் பிரதி அமைச்சராக இருந்த சோமவீர சந்திரசிறி யாழ் வந்தபோது அவரது காரையும் குண்டு வைத்து தகர்க்க முயன்றார்.

1972 சத்தியசீலன் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து வன்முறைக் குழுக்கள் பல அரசிடம் பிடிபட்டது. இதைத் தொடர்ந்து யாழ் கிருபாகரன், அளவெட்டி ஆனந்தன் போன்றோர் மாணவர் பேரவையை வழிநடத்தி அரசுக்கெதிரான பல போராட்டங்களை நடாத்தினர். இந்த நேரத்தில் மாணவர் பேரவையின் வளர்ச்சி கண்ட திரு அமிர்தலிங்கம் மாணவர் பேரவையை தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியுடன் இணைப்பதில் முயன்று வெற்றிகண்டார்.

1972 April மாதம் தமிழரசுக்கட்சி, தமிழ்காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானது. இதைத்தொடர்ந்து வாலிப முன்னணி மாவை சேனாதிராசா தலைமையில் இளைஞர் பேரவையாக மாற்றம் பெற்றது. 1974 யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத்தமிழ் ஆராட்சி மாநாட்டின்போது இலங்கை இராணுவத்தினரால் கொல்லப்பட்ட 09 இளைஞர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இளைஞர் பேரவை நடாத்திய போராட்டங்களின் காரணமாக மாவை. சேனாதிராசா, காசி ஆனந்தன் உட்பட 42 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

இதனால் இளைஞர் பேரவையை புஸ்ப்பராஜா, வரதராஜா ஆகியோர் வழி நடாத்தினர் இக்காலகட்டத்தில் தமிழர் விடுதலை கூட்டணியின் மிதவாதப் போக்கைப்பிடிக்காத இளைஞர் பேரவை தனித்து இயங்கத் தீர்மானித்தது. மாவை. சேனாதிராசா, காசி ஆனந்தன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டபின் மீண்டும் இளைஞர் பேரவையின் தலைமைகள் இவர்களுக்கே வழங்கப்பட்டது. இதனால் இளைஞர்கள் மத்தியில் கசப்புணர்வு தோன்றி ஒருபிரிவினர் ஆயுதப்பிரிவாகத் தனித்து இயங்கத் தீர்மானித்தனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தோற்றம்.
தமிழ் புதிய புலிகள்- T.N.T - யாழ்குடாநாட்டில் கல்வியங்காட்டில் செட்டி என அழைக்கப்பட்ட தனபாலசிங்கத்தின் தலைமையில் ஒருசிலர் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வந்தனர். இவர்கள் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்த சில பிரமுகர்களால் சில தனிநபர்கள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுத்தப்பட்டனர். அதை தொடர்ந்து இவர்கள் மறைந்த முன்னாள் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு ஆலாலசுந்தரத்தின் ஆலோச னையின் பெயரில் தமிழ் புதிய புலிகள்என ஒரு குழு நிலையில் இருந்து செயற்பட்டனர்.

குட்டிமணி, தங்கத்துரை குழு விடம் இந்தியாவில் சேர்ந்திருந்த பிரபாகரன் 1974 அந்தக் குழு இலங்கையில் செயற்படாமல் இந்தியாவில் இருந்து செயற்படுவதாக குற்றம் சாட்டி அவர்களுடன் முரண்பட்ட நிலையில் இலங்கை வந்து செட்டியின் தலைமையிலான தமிழ் புதிய புலிகளில் தன்னை இணைத்துக்கொண்டார். தமிழ் புதிய புலிகள் குழுவில் ரமேஸ், சிவராசா, இன்பம், கண்ணாடிப்பத்மநாதன், பற்குணராஜா, கலாபதி, யாழ்கிருபாகரன், பிரபாகரன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.
T.N.T குழுவின் நடவடிக்கைகள்:

1974ல் முதல் நடவடிக்கையாக, யாழ் தெல்லிப்பளை கூட்டுறவுப்பண்டகசாலை Co-Operative பணம் 97-ஆயிரம் ரூபா கொள்ளை. செட்டி, சிவராசா, ரமேஸ், பிரபாகரன் ஆகியோர் பங்குபற்றினர்.

1975 யாழ் மாநகர மேயர் அல்பிரட் துரையப்பா சுட்டுக்கொல்லப்பட்டார். பற்குணராஜா, கலாபதி, கிருபாகரன், பிரபாகரன் ஆகியோர் பங்குபற்றினர்.

1976 புத்தூர் வங்கியில் 10-லட்சம் ரூபா கொள்ளை. கராட்டி-ஜெயவேலு, செல்லக்கிளி-செட்டியின்தம்பி, உதயகுமார், பிரபாகரன் ஆகியோர் பங்குபற்றினர். இந்நடவடிக்கைகள் செட்டி தலைமையில் மேற்படி குழு இருந்தபோது நடைபெற்றது. இவர் தனிப்பட்ட கொள்ளைகளில் ஈடுபட்டு தனது சொந்த நலனையும் கவனித்து வந்தார். இவர் பின்னர் 1981 குட்டிமணியால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பெரியசோதி, சின்னச்சோதி ஆகியோரும் 1983 July வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட தங்கத்துரை, குட்டிமணி ஆகியோரும் 1986ல் புலிகள் இயக்கத்தால் படுகொலை செய்யப்பட்ட T.E.L.O இயக்கத்தின் தலைவர் சிறிசபாரத்தினமும் தனி ஒரு குழுவாக செயற்பட்டு வந்தனர். இக்குழுவினரே பின்னர் T.E.L.O தமிழீழ விடுதலை இயக்கம் என்ற பெயரில் செயற்பட்டனர். T.E.L.O குழுவினரின் நடவடிக்கைகள்:

1976ல் அருளம்பலம் - முன்னைநாள் நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் கொலை முயற்சி, கு. வினோதன் கொலை முயற்சி - உடுவில் தொகுதி சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்.

1977 தாடி தங்கராஜா கொலை. 1978 பொலிஸ் அதிகாரி பத்மநாதன;-I.P கொலை, பொலிஸ் அதிகாரி குருச்சாமி கொலை - இவர் சன்சோனி கமிஸனிடம் அரசுக்கு ஆதரவாக சாட்சி கூறியவர், ஓய்வு பெற்ற போலிஸ் அதிகாரி குமார் கொலை.

ஞானசேகரம்-பரந்தன்ராஜன் E.N.D.L.F , மாணிக்கதாசன் P.L.O.T.E ஆகியோர் குமரபுரம் Group என இயங்கினர். இந்நேரம் கொழும்பில் அரச நில அளவையாளராக கடமையாற்றிக் கொண்டிருந்த உமாமகேஸ்வரன் அவர்கள் தமிழர் விடுதலைக்கூட்டணியின் கொழும்பு கிளை செயலாளராகவும் பணிபுரிந்தார். அப்போது அவர் சகல தமிழ் குழுக்களுடனும் தொடர்புகளைக் கொண்டிருந்தார். அக்காலத்தில் ஒரு குண்டுவெடிப்புச் சம்பவத்தின்போது காயமுற்ற T.E.L.O இயக்க ஆரம்ப கர்த்தாவான தங்கத்துரை அவர்கள் உமாமகேஸ்வரனின் யாழ் வீட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆரம் காலத்தில் குழுக்களிடையே இவ்வாறான செயற்பா ட்டில் காணப்பட்ட ஒற்றுமைக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

செட்டி தலைமையிலான தமிழ் புதிய புலிகளை T.N.T ஓர் கோட்பாட்டின் அடிப்படையில் கட்டுப்பாட்டுடனும் கொள்கை அடிப்படையிலும் செயற்படுத்த வேண்டும் என்ற நோக்கமும் ஆக்கமும் அவ்வியக்கத்தில் உமாமகேஸ்வரன் அவர்கள் இணைந்து கொண்ட பின்பே ஏற்பட்டது. அதன்காரணமாகவே தமிழ் புதிய புலிகள் என்ற பெயர் உமாமகேஸ்வரனால் தமிழீழ விடுதலைப் புலிகள் என பெயர் மாற்றம் ஏற்பட்டதுடன் அதன் முதல் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டு செயற்பட்டார்.

இதனைத் தொடர்ந்து தமிழ் இளைஞர்கள் பலர் இவ்வியக்கத்துடன் இணைக்கப்பட்டு அவர்களுக்கென வன்னிப் பிரதேச காடுகளில் விவசாயப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. அங்கே அவர்கள் ஆயுதப்பயிர்ச்சியும் பெற்றனர். தமிழ் புதிய புலிகள் முன்னின்று நடாத்திய முன்னாள் யாழ் நகர முதல்வரும், பாராளுமன்ற உறுப்பினருமான அல்பிரட் துரையப்பா கொலை உட்பட பல கொலைகளைப் பற்றி புலனாய்வு செய்ய குற்றப் புலனாய்வுத்துறை பொறுப்பதிகாரியாக இருந்த பஸ்தியாம்பிள்ளை முயன்று தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றிய பல உண்மைகளை சேகரித்திருந்தார். அத்துடன் வன்னிப் பிராந்தியத்தில் ஆயுதப்பயிற்சி பெற்ற முகாமொன்றையும் கண்டுபிடித்து அவர்களைக் கைது செய்ய முயன்றபோது அங்கு சுட்டுக்கொல்லப்பட்டார். அவருடன் சென்ற மூன்று பொலிசாரும் கொல்லப்பட்டனர். இதுவே அரசு யந்திரத்துக்கெதிராக ஒருங்கமைக்கப்பட்ட தாக்குதலாக அமைந்தது. இதைத் தொடர்ந்து அரசு இயந்திரத்துக்கு எதிரான தாக்குதல் தீவிரமடைந்தது. அவ்விதமான தாக்குதல்களில் இரத்மலானை விமான நிலையத்தில் அவ்ரோ விமானம் குண்டு வைத்து தாக்கப்பட்டது முக்கியமானதாகும். விடுதலைப் புலிக ள் இயக்கத்தினால் அரசுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி முதன்

முறையாக உரிமை கோரப்பட்டது ஊ.ஐ.னு அதிகாரி பஸ்தியாம்பிள்ளையின் கொலையைத் தொடர்ந்தேயாகும். இந்த உரிமை கோரும் பிரசுரம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மகளிர் பேரவை கொழும்புக்கிளை செயலாளராக இருந்த ஊர்மிளாதேவி அவர்களால் அரசாங்க எதிர்க்கட்சி தலைவரின் பாராளுமன்றக் காரியாலயத்தில் தட்டச்சு செய்யப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் உமாமகேஸ்வரனால் கையொப்பமிடப்பட்டு வெளியானது. ஊர்மிளாதேவிக்கு உதவியாக அரசாங்க

எழுதுவினைஞராக கொழும்பில் கடமையாற்றிய செல்வி திலகவதியும் பங்காற்றினார். தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தில் பங்குபற்றிய முதல் பெண்மணிகள் இவர்களாவர். தமிழீழப்

போராட்டத்துக்கு பலஸ்த்தீன விடுதலை இயக்கத்தின் தொடர்புகளை முதன்முதலாக ஏற்படுத்திக் கொடுத்தவர் நு.சு.மு.ளு இயக்கத்தின் தாபகரான இரட்ணசபாபதி அவர்களே. பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் இவர் கொண்டிருந்த தொடர்பால் புலிகள் இயக்கத்திற்கும் லெபனானில் பயிற்சி கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அதைப் பயன்படுத்தி புலிகள் இயக்கத்தின் சார்பில் அதன் தலைவர் உமாமகேஸ்வரன், விச்சுவேஸ்வரன் ஆகிய இருவரும் 1976ல் லெபனானில் சென்று பயிற்சி பெற்றனர்.

1977ல் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் திரு. அமிர்தலிங்கம் விடுதலைப் புலிகளின் சார்பில் உமாமகேஸ்வரன், பிரபாகரன், நாகராசா, விச்சுவேஸ்வரன், ஐயர் ஆகியோர் கலந்து கொண்ட பேச்சுவார்த்தையின் போது புலிகளுக்கு நிதி, ஆயுதஉதவி, பயிற்சி ஆகியவற்றிற்கு தாம் உதவுவதாக திரு. அமிர்தலிங்கம் ஏற்றுக்கொண்டதை அடுத்து T.U.L.F ஒருவெகுஜன அமைப்பாகவும் L.T.T.E தலை மறைவாகவும் வேலை செய்வதென முடிவெடுத்தனர். ஆனால் திரு. அமிர்தலிங்கம் தான் ஒப்புக் கொண்டதன்படி எந்த உதவிகளும் செய்யவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளராக பொத்துவிலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கனகரத்தினம் பின்னர் கட்சி மாறி ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்ததைத் தொடர்ந்து அவர்மேல் 1978ல் January 28 கொலை முயற்சி நடந்தது. இதில் நேரடியாக உமாமகேஸ்வரனும்,பிரபாகரனும் பங்கு கொண்டனர். அதனைத் தொடர்ந்து உமாமகேஸ்வரன் அவர்கள் தலைமறைவானார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவராக இருந்து கொண்டு கொழும்பில் அரச ஊழியராகவும் உமாமகேஸ்வரன் கடமையாற்றியதால் அவரால் வெளிநாட்டு தொடர்புகளை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. இவருக்கு கியூபா தூதரகத்துடன் ஏற்பட்ட தொடர்புகளினால் 1978 கியூபாவில் நடைபெற்ற கியூபாவின் இளைஞர் மாணவர் பேரவையின் 11வது மகாநாட்டிற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் ஐவரை அனுப்பும் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தார் இந்த மகாநாட்டில் மாவை சேனாதிராசா, காசி ஆனந்தன் ஆகியோர் இளைஞர் பேரவை சார்பிலும். சிங்கநாயகம், சாந்தன், லோகேஸ்வரன் ஆகிய மூவரும் L.T.T.E சார்பிலும் கலந்து கொண்டதன் மூலம் தமிழீழப் போராட்டம் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. கியூபா மாநாட்டுக்கு L.T.T.E சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் உமாமகேஸ்வரனின் கையொப்பத்துடன் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கனகரட்ணம் M.P கொலை முயற்சியை அடுத்து அரசினால் தேடப்பட்டமையால் இவரால் கியூபா மாநாட்டில் கலந்து கொள்ள முடியாமல் போயிற்று.

### பஸ்தியாம்பிள்ளை கொலை:

தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றிய பல தகவல்களைப் பெற்றிருந்த பஸ்தியாம்பிள்ளை தனது பதவி உயர்வை கருத்தில் கொண்டு இந்தத் தகவல்களை தனது உயர் அதிகாரிகளுக்கும் தெரிவியாது இரகசியமாக வைத்திருந்தார். 1978 April மடுக்கோவிலுக்கு அருகாமையிலிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முகாம் ஒன்றை புலனாய்ந்து அறிந்து அங்கு வாகனமொன்றில் மூன்று பொலிசாருடன் மாத்திரம் சென்றார். அவர் அங்கு செல்லும்போது தான் செல்லுமிடத்தைப்பற்றி தனது மேலதிகாரிகளுக்கு அறிவிக்காமலே சென்றார். பஸ்தியாம்பிள்ளை அங்கு சென்றபோது முகாமில் உமாமகேஸ்வரன், நாகராசா-வாத்தி, சோட்பால-பாலஅண்ணை, செல்லக்கிளி, ரவி, ஐயர், கறுப்பி போன்றோர் உட்பட முக்கிய புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருந்தனர். இவர்கள் அனைவரும் பண்ணையில் வேலைசெய்யும் விவசாயிகளைப் போலவே காட்சியளித்ததுடன் தாங்கள் இயக்கத்துடன் சம்பந்தப்படாதவர்கள் போல நடந்துகொண்டனர். ஆனால் இவர் கள் யார் என்பதைப் புரிந்து கொண்ட பஸ்தியாம்பிள்ளை தானும் இவர்கள் இயக்கத்துடன் சம்பந்தப்படாதவர் கள் என நம்புவதாக நடித்து இவர்களை தன்னுடன் அழைத்துச் செல்ல முயன்றார். தகுந்த சந்தர்ப்பம் ஏற்பட்ட போது பஸ்தியாம்பிள்ளையும், அவரது சகாக்களும் அங்கேயே கொல்லப்பட்டனர். பஸ்தியாம்பிள்ளை கொலையைத் தொடர்ந்து அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய தகவல்கள் அழிக்கப்பட்டதுடன் அவருக்கு தகவல் கொடுத்தவர்கள் பற்றியும் அறிய முடிந்தது. இவருக்கு தகவல் கொடுத்தவர்களில் முக்கியமானவர் செட்டி தனபாலசிங்கம் என இனம் காணப்பட்டார்.

1978ல் October 07 J.R. ஜெயவர்த்தனா இரண்டாவது குடியுரிமைச்சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றப்படுவதை எதிக்கும் நோக்கில் இரத்மலானை விமான நிலையத்தில் அவ்ரோ விமானத்தை குண்டுவைத்துத் தகர்க்க L.T.T.Eயினால் திட்டமிடப்பட்டது. அதற்கான Time bomb தயாரிக்கும் பொறுப்பை உமாமகேஸ்வரனும், அதை விமானத்தில் வைக்கும் பொறுப்பை பேபி-சுப்ரமணியமும் ஏற்றனர். இதை வெற்றிகரமாக ராகவன் செயல்ப்படுத்தினார்.

புலிகள் இயக்கம் தனி அமைப்பாக இருந்த போதிலும்தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் மிக நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தது. இந்தக்காலத்தில் கூட்டணியினரின் மிதவாதப் போக்கைப் பிடிக்காத இளைஞர்கள் இளைஞர் பேரவையிலிருந்து விலகினார்கள். இவர்களில் சந்ததியார், இராவாசுதேவா, இறைகுமாரன், யோகநாதன், முத்துக்குமாரசாமி, வரதராஜப்பெருமாள், குமரன், பத்மநாபா போன்றோர் முக்கியமானவர்கள்.

## தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பிளவு:

கியூபா மகாநாட்டுக்குப் பின்னர் அரசினால் தேடப்பட்ட ஊர்மிளாதேவியை பிரபாகரன் இந்தியா அனுப்பிவைத்தார். ஊர்மிளாதேவி இந்தியா சென்றதும் இந்தியாவிலுள்ள L.T.T.E அலுவலகப் பொறுப்புக்கள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் அலுவலகப் பொறுப்பைக் கையேற்றதும் ஒவ்வொருவருடைய வேலைகளையும் ஒழுங்கமைத்தார். இதனால் இவர் அலுவலகத்திற்கு பொறுப்பாக இருப்பதை நாகராசா விரும்பவில்லை. அவருக்கு எதிராக பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டார். நாகராசா குடியேற்றங்கள், வெகுஜன வேலைகளுக்கு எப்போதும் எதிர்ப்பு தெரிவித்து வந்தார். உமாமகேஸ்வரன் புனர்வாழ்வு வேலைகளில் அதிக கவனம் செலுத்தி வந்தார். பிரபாகரன் எப்போதும் இராணுவத்திலேயே கவனம் செலுத்தி வந்தார். இராணுவ நடவடிக்கைகளில் தன்னைவிட யாரும் முன்னிலையில் நிற்பதை இவர் எப்போதுமே விரும்பியது கிடையாது. இந்த ரீதியிலேயே கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மைக்கல், பற்குணராசா ஆகிய இருவரும் உமாமகேஸ்வரன் லெபனான் பயிற்சியில் இருந்த காலத்தில் பிரபாகரனால் கொல்லப்பட்டனர்.

01.பற்குணராசா-சரவணன்: ஆரம்பகால உறுப்பினர் எல்லாவகையான வாகனங்களும் ஓட்டப்பயிற்சி பெற்றவர். இயக்கத்தை மக்கள் அமைப்பாக மாற்ற வேண்டும் என முயற்சி எடுத்தவர். இவா நாகராசா, தங்கராசா ஆகிய இருவராலும் தந்திரமாக ஒருவீட்டுக்கு அழைத்துச் செல்லும்போது பிரபாகரனால் மறைந்திருந்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

02.மைக்கல் மட்டுநகரில் இருந்து புறப்பட்ட முதல்ப்போராளி. கிழக்கு மாகாணத்தை தலைமைதாங்கக் கூடியதிறமை பெற்றவர். ஆயுதங்களை கையாள்வதில் மிகவும் சிறந்தவர். இவர் 1976 பிரபாகரனால் கொல்லப்பட்டார். இக்கொலைகளே புலிகள் இயக்கத்தில் நடந்த முதல் உட்கொலைகளாகும். இக்கொலைகள் வெளியே தெரியவந்தபோது இவர்கள் அமைப்புக்கு துரோகம் செய்ததாக பிரபாகரன் குற்றம் சாட்டினார். அதே நேரம் பிரபாகரன் தலைமைக்கு ஆசைப்படுவதாக நாகராசா குற்றம் சாட்டினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் அரசியல் நடவடிக்கைகள் சில L.T.T.E இயக்கத்தில் முரண்பாடுகளை வளர்க்கத் தொடங்கின. தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் நடவடிக்கைகளை விமர்சிப்பது என புலிகள் இயக்கத்தில் தீர்மானிக்கப் பட்டதையடுத்து கூட்டணிக்கு எதிராக உமாமகேஸ்வரனால் எழுதி அச்சிடப்பட்டு இந்தியாவில் இருந்து பிரபாகரன் மூலம் குடா நாட்டுக்கு துண்டுப்பிரசுரங்கள் அனுப்பப்பட்டன. ஆனால் இந்தத் துண்டுப்பிரசுரம் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு அமிர்தலிங்கம், காசிஆனந்தன் ஆகியோரின் வேண்டுகோளை அடுத்து பிரபாகரளால் எச்சரிக்கப்பட்டு மக்களுக்கு வினியோகிக்கப்படாமல் தடுக்கப்பட்டது. அக்கால கட்டத்தில் பிரபாகரன் அமிர்தலிங்கம் அவர்க ளின் செல்லப்பிள்ளையாகவே விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

உமாமகேஸ்வரனின் கூட்டணிக்கு எதிரான போக்கு,
பிரபாகரனின் சுத்த இராணுவக் கண்ணோட்டம்,
ஊர்மிளா தேவிக்கு எதிரான நாகராசாவின் போக்கு

எல்லாம் உள் முரண்பாடுகளை தோற்றுவித்தது. தொடர்ந்து மத்திய சபை உறுப்பினர்கள் சிலரிடம் உமாமகேஸ்வரன் கணக்கு விபரங்கள் கேட்டதைத் தொடர்ந்து இவர்களால் இந்த முரண்பாடு வளர்க்கப்பட்டது. இதை தொடர்ந்து உமாமகேஸ்வரனுக்கும், ஊர்மிளாதேவிக்கும் இடையே

காதல் இருந்ததாகவும் இது புலிகள் இயக்க சட்ட விதிகளுக்கு விரோதம் என குற்றம் சாட்டப்பட்டபோது உமாமகேஸ்வரன் இயக்கத்திலிருந்து வெளியேறினார். பின்னர் அவருக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டது. பிரபாகரன் திருமணம் செய்தபோது இதே வாதங்களை முன்வைத்து ராகவன் பிரபாகரன்மேல் குற்றம் சாட்டியபோது ராகவன் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. உமாமகேஸ்வரனின் வெளியேற்றத்தின் பின்னரும் டு.வு.வு.நுயில் இருந்த இரண்டு நிலை மீண்டுமோர் பாரிய உடைவுக்கு வழிவகுத்தது.

01. T.U.L.F ஆதரவுடனான வளர்ச்சிப்போக்கு.

02. மக்கள் அமைப்புகள் மூலம் மக்களை ஒரு போராட்டத்திற்கு தயார் செய்தல்.

பிரபாகரன் இராணுவ ரீதியாக சிந்திப்பவராக கூட்டணியை சார்ந்தும் அப்போது விளங்கினார். ஆனால் சுந்தரம், கண்ணன் போன்றோர் மக்கள் அமைப்புகள் மூலம் மக்களை ஒரு போராட்டத்திற்கு தயார் செய்யவேண்டும். அரசியலுக்காக இராணுவம் என்ற கோட்பாட்டைக் கொண்டிருந்தனர். இதனால் இவர்களிடையே கருத்து வேறுபாடு கடுமையாக வளர்ந்தது சுந்தரம், கண்ணன், காத்தான், செல்லக்கிளி-அம்மான், நாகராசா, ஐயர் போன்ற பலர் இயக்கத்திலிருந்து வெளியேறினர். இவர்கள் வெளியேறியபோது புலிகள் இயக்கத்தின் ஆயுதங்கள் சுந்தரத்திடமே இருந்ததால் பிரபாகரன் இவர்களுடன் சமரச முயற்சிகளில் ஈடுபட்டார். இதன் காரணமாக இருபகுதியினரும் ஒரு உடன்பாட்டிற்கு வந்தனர். அதன்படி இரு பகுதியினரும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயரை பாவிப்பதில்லை என்று ஒப்புக்கொண்டதை அடுத்து சுந்தரம் குழுவினர் தங்களிடம் இருந்த ஆயுதங்களை பிரபாகரனிடம் ஒப்படைத்தனர். இப்படி ஆயுதங்களைப் பெற்ற பிரபாகரன் பின்னர் சுந்தரம் குழுவினர் ஆயுதங்களை கையாடிக்கொண்டு வெளியேறியதாகவும் அதற்கான மரணதணடனை எனவும் சுந்தரம் சுடப்பட்டபோது உரிமை கோரியமை குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இரண்டாகப் பிரிந்ததும் முன்னர் இயக்கத்திலிருந்து வெளியேறிய உமாமகேஸ்வரனுடன் தன்னை இணைத்துக்கொள்ளும் முயற்சிகளை பிரபாகரன் மேற்கொண்டார். ஆனால் சந்ததியாரின் முயற்சியின் காரணமாக சுந்தரம் குழுவினர் 1980 முஉவழடிநச உமாமகேஸ்வரனை தம்முடன் இணைத்துக்கொள்வதில் வெற்றி கண்டார். சுந்தரம் குழுவினருடன் உமாமகேஸ்வரன் இணைந்ததைத் தொடர்ந்து பிரபாகரன் தங்கத்துரை, குட்டிமணி போன்றோருடன் இணைந்து கொண்டார். அக்காலகட்டத்தில் தமிழ் தீவிரவாதக் குழுக்கள் மேற்கொண்ட சகல நடவடிக்கைகளையும் மக்கள் புலிகளது செயற்பாடாகவே கருதினர்.

குட்டிமணி, தங்கத்துரை, குழுவுடன் பிரபாகரன் இணைந்து கொண்ட பின்னர் அவர்களின் நடவடிக்கைகள்:

1981: குரும்பசிட்டி வன்னியசிங்கம் நகை அடவுக்கடை
கொள்ளை- தங்கத்துரை, குட்டிமணி, பிரபாகரன், சிறி சபாரட்ணம் ஆகியோர் பங்கு கொண்டனர்.
1981: செட்டிதனபாலசிங்கம் கொலை- குட்டிமணி பங்கு கொண்டார்.
1982: நீர்வேலி வங்கிக்கொள்ளை 82 லட்சம் ரூபாய் - குட்டிமணி, தங்கத்துரை, பிரபாகரன், ஒபரோய் தேவன் ஆகியோர் பங்கு கொண்டனர். குட்டிமணி, தங்கத்துரை ஆகியோர் கைது செய்யப்பட்டதை அடுத்து

அப்போது ராகவன் தலைமையில் இயங்கிவந்த L.T.T.Eயில் மீண்டும் பிரபாகரன் இணைந்து கொண்டார். பின்னர் செல்லக்கிளியும் இவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

உமா-சுந்தரம் குழுவினர் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தை தாக்கியதை அடுத்து L.T.T.E தாங்களும் ஒரு பொலிஸ் நிலையத்தை தாக்கவேண்டும் என்பதற்காக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை தாக்கினர். இத்தாக்குதலில் ஆசிர்-அன்ரனி, செல்லக்கிளி-அம்மான், சங்கர் ஆகியோர் முன்னின்று நடாத்தினர். இந்த பொலிஸ் நிலையம் 1984 வு.நு.டு.மு இயக்கத்தினால் நிர்மூலமாக்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் உமா-சுந்தரம் குழுவினர் ஒரு மக்கள் அமைப்பை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு அதன் ஆரம்ப கட்டமாக புனர்வாழ்வு வேலைகளில் ஈடுபட்டனர்.
புலிகள் இயக்கத்தில் உமாமகேஸ்வரன் இருந்த காலத்தில் நெடுங்கேணியில் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தால் ஏற்படுத்தப்பட்ட கென்பாம், டொலர்பாம் விவசாய பண்ணைகளில் புனர்வாழ்வு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தார்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு 1947 அரசு ஊழியர் வேலை நிறுத்தத்தில் முக்கிய பங்கு கொண்டு வேலையிழந்த போராளியான காலம் சென்ற K.C. நித்தியானந்தன் அவர்களின் உதவி பெருமளவில் உமாமகேஸ்வரனுக்கு கிடைத்தது. இதே அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு வவுனியாவில் கட்டிடக்கலைஞர் திரு.ஏ.யு. டேவிட் அவர்களை தலைவராகவும். 1983 July வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட னுசு. இராசசுந்தரத்தை அமைப்பாளராகவும் கொண்டு இயங்கிய காந்தீயம் அமைப்பின் ஊடாக உமாமகேஸ்வரன் குழுவினர் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். புனர்வாழ்வு நடவடிக்கைகள் நடைபெறும் அதேவேளை தமது கருத்துக்களை மக்களிடையே எடுத்துச்செல்லும் நோக்குடன் புதியபாதை என்ற மாதாந்த பத்திரிகையையும் இவர்கள் வெளியிட்டனர். 1981 July மாதம் ஆயுதம் சேகரிக்கும் நோக்குடன் உமாமகேஸ்வரன் குழுவினர் ஆனைக்கோட்டை பொலிஸ்நிலைய தாக்குதலை வெற்றிகரமாக நடாத்தி முடித்து அங்கிருந்து ஆயுதங்களை கைப்பற்றினர். தமிழ்ப் போராளிக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட முதல் பொலிஸ்நிலைய தாக்குதல் இதுவேயாகும்.

இதே காலத்தில் L.T.T.Eயினருக்கு ஆதரவாக T.சிவகுமாரன் Bsc உணர்வு என்ற பத்திரிகையை நடாத்திவந்தார். மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல்: இனப்பிரச்சனைக்கு தீர்வாக ஸ்ரீலங்கா அரசு மாவட்ட அபிவிருத்திச்சபை என்ற ஒரு தீர்வை முன்வைத்தது. அதனை தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக்கொண்டது. இம்மாவட்ட சபையை பின்னர் எதிர்த்த தந்தை செல்வாவின் மகன் சந்திரகாஸன் அவர்களும் இதை ஆரம்பத்தில் ஆதரித்தவரே. ஆனால் இளைஞர் மத்தியில் இதற்கு கடுமையான எதிர்ப்பு நிலவியது. மாவட்ட அபிவிருத்திச் சபையையும், அதற்கு ஆதரவு வழங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியினரையும் மிகக் கடுமையாகக் கண்டித்து புதியபாதை கட்டுரைகளையும்,

காட்டுன் படங்களையும் வெளியிட்டு வந்தது. அது மாத்திரமல்ல புதியபாதைக் குழுவினர் மாவட்ட சபைக்கு எதிராக பிரச்சாரக்கூட்டங்களையும் நடாத்தி வந்தனர். இந்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தலுக்கான பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றன. பல கூட்டங்கள் இளைஞர்களால் குழப்பப்பட்டன. தேர்தலுக்கான தமிழர் விடுதலைக் கூட்டணியின் கடைசி பிரசாரக் கூட்டம் நாச்சிமார் கோவிலடியில் 1981 May 31ம் திகதி நடைபெற்றது. இக்கூட்டத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிசார் சுட்டுக் கொல்லப்பட்டதை தொடர்ந்து பேரினவாத அரச படைகள் நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பல கடைகள், வீடுகளை எரித்து பலரை சுட்டுக் கொன்றனர். இந்த வன்செயல்களின்போதே யாழ் பொதுநூலகம், ஈழநாடு பத்திரிகை காரியாலையம், யாழ் மாவட்டM.P யோகேஸ்வரன் வீடு ஆகியனவும் எரிக்கப்பட்டன. பழைய பொதுச்சந்தையும் இச்சந்தர்ப்பதிலே எரிக்கப்பட்டது. நாச்சிமார் கோவில் கூட்டத்தில் பொலிசாரை சுட்ட சம்பவத்தில் றொபேட், மாணிக்கதாஸன், உமாமகேஸ்வரன், காத்தான் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.

முன்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளராக விளங்கிய முன்னைநாள் வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் ஆ.தியாகராசா அவர்கள் பின்னர் மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் பட்டியலில் முதன் மை வேட்பாளராகப் போட்டியிட்டார். அவரும் சுட்டுக் கொல்லப்பட்டமை இங்கு குறிப்பிடப்படல் வேண்டும். மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் நிராகரிக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கொண்டிருந்த தமிழ் மக்கள் நாச்சிமார் கோவிலடிச் சம்பவத்தை அடுத்து ஸ்ரீலங்கா பொலிஸாரதும், இராணுவத்தினரதும் அழித்தொழிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நோக்குடன் பெருமளவில் தமிழர் விடுதலை கூட்டணிக்கு வாக்களித்தமையும் இங்கு குறிப்பட்ப்படல் வேண்டும்.

### சுந்தரம் கொலை:

தமிழர் விடுதலைக் கூட்டணியினரை கடுமையாகக் கண்டித்து கட்டுரைகள் புதியபாதையில் வெளியிட்டு வந்த காரணத்தால் அமிர்தலிங்கம் புதியபாதைக் குழுவினர் உமாமகேஸ்வரன், சுந்தரம், சந்ததியார், கண்ணன் ஆகியோர் மேல் கோபம் கொண்டிருந்தார். இதனால் கூட்டணியின் முக்கிய பிரமுகர்கள் கூட்டணியை கடுமை யாக விமர்சனம் செய்வதை விடும்படி வேண்டினர். இதனால் அமிர்தலிங்கம் அவர்களை விமர்சிப்பதை தவிர்த்து தமிழர் விடுதலைக் கூட்டணியை விமர்சித்து கட்டுரைகள் வெளிவந்தன. கூட்டணியை விமர்சிப்பதையும் ஏற்றுக் கொள்ளாத திரு அமிர்தலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர்மட்டக் குழுக்கூட்டத்தில் புதியபாதை பத்திரிகையை எப்படியாவது வெளிவராது தடுப்பதாக கூறியிருந்தார். இதையடுத்து சில நாட்களின் பின்னர்1982 January 02 சித்திரா அச்சகத்தில் சுந்தரம் பிரபாகரன் குழுவினரால் கொலை செய்யப்பட்டார். இந்தக்கால கட்ட த்தில் பிரபாகரன் அமிர்தலிங்கம் அவர்களின் செல்லப்பிள்ளையாகவே செயல்ப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் P.L.O.T.E மக்கள் அமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வந்த புதியபாதை குழுவினர் மக்கள் அமைப்பை ஏற்படுத்துமுகமாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி அந்தப்பெயரில் பொங்கல் வாழ்த்து மடல், நத்தார் வாழ்த்து மடல் ஆகியன அச்சிட்டு வினியோகித்தனர். அத்துடன் விவசாகிகளுக்கு ஒரு அமைப்பை ஏற்படுத்தி 1981May மாபெரும் ஊர்வலங்களுடன் மேதினக் கூட்டம் ஒன்றை வவுனியாவில் நடாத்தினர். 1982 January சுந்தரம் கொலையைத் தொடர்ந்து நடைபெற்ற புலன் விசாரணையை அடுத்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் P.L.O.T.E பகிரங்கமாக இயங்க முடியாமையால் பின்னர் இராவாசுதேவாவை அமைப்பாளராகக் கொண்டு தமிழீழ விடுதலைக் கழகம் என்ற பெயரில் அரசியல் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பினூடாக 1982,83 ஆண்டுகளில் முறையே மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் மேதினம் கொண்டாடப்பட்டது.

1982 M.ay மாதம் பாண்டிபஜாரில் பிரபாகரன்- உமாமகேஸ்வரனை சுடமுயன்ற சம்பவத்தை அடுத்து லங்காராணி நாவலை எழுதிய அருளர் இயக்கங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முயன்றார். அப்போது அவ் ஒற்றுமை முயற்சியில் தாம் கலந்து கொள்வதானால் தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் இயக்கப் பெயரை தமக்கு உமாமகேஸ்வரன் விட்டுத்தரவேண்டும் என்ற நிபந்தனை போட்டதை அடுத்து அந்தப் பெயர் பிரபாகரனுக்கு விட்டுக்கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைக் கழகம் அரசியல் அமைப்பாகவும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் P.L.O.T.E இராணுவ அமைப்பாகவும் செயற்படத் தொடங்கின. தமிழீழ விடுதலை கழகத்தின் பிரசார ஏடாக விடுதலை என்ற மாதப் பத்திரிகை 1983 வெளிவந்தது. 1983 துரடல இனக்கலவரத்தைத் தொடர்ந்து இலங்கை வாழ் தமிழ் மக்கள் தம்மை பாதுகாக்க இந்தியா வரவேண்டும் என்ற எண்ணத்தை கொண்டிருந்தனர். இயக்கங்கள் மத்தியில் கூட இவ்வித எண்ணங்கள் நிலவியது. ஆனால் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் P.L.O.T.E, தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி-N.L.F.T ஆகிய இரு இயக்கங்கள் மாத்திரமே இந்தியாவின் நேரடித் தலையீட்டை ஆதரிக்கவில்லை. அன்னிய இராணுவம் ஒன்றின் வருகையால் ஏற்படக்கூடிய அழிவை "வங்கம் தந்த பாடம்" என்ற நூலை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் வெளியிட்டதன் மூலம் தமிழ் மக்களை முன்கூட்டியே எச்சரித்திருந்தது. அன்நூலில் முன்னைய கிழக்கு பாகிஸ்தானின் விடுதலைப்போரில் இந்தியப் படையினர் ஈடுபட்டதனால் வங்காள-பங்காளதேஸ் மக்களுக்கு இளைக்கப்பட்ட கொடுமைகள் அழிவுகள் எடுத்து விழக்கப்பட்டிருந்தது.

1987 இலங்கை இந்திய ஒப்பந்தத்தை தொடர்ந்து நாட்டிற்கு வந்த இந்தியப் படையினரின் செயற்பாடும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்பும் P.L.O.T.E - N.L.F.T ஆகியன மேற்கொண்ட நிலைப்பாடு தொலைநோக்குடன் மேற்கொள்ளப்பட்ட முடிவு என்பதை நிரூபித்தன. 1984 இந்தியாவுடன் நல்லுறவு இல்லாத நிலையில் P.L.O.T.E சென்னைத் துறைமுகத்தினூடாக ஆயுதம் இறக்க முயன்றபோது 4 கோடி இந்திய ரூபா பெறுமதியான ஆயுதங்கள் இந்திய சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டது. இந்த ஆயுதங்களை இந்தியா தங்களுக்கு தந்ததாக L.T.T.E இயக்கத்தினர் பின்னர் பெருமையாக கூறிவந்தனர்.

**நன்றி**
எம்மைப்பற்றிய சுருக்கமான வரலாற்றைத் தந்துள்ளோம்.
**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்**